# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, NATHAM

Case No. S.T.C.No. 80 of 2020 LW- 1 PW- 1

Name : வேலவேந்தன் (புகார்தாரர்)

Father's/Husband's Name : போஸ்

Village : செந்துறை

Taluk : நத்தம்

District : Dindigul

Age : 28/2024

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2024

**(சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் மீண்டும் முதல் விசாரணை)**

3. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கவரிங் நகை வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது சித்தப்பா மற்றும் சித்தி ஆவார்கள். கடந்த 21.09.2018 ம் தேதி என்னுடைய பொருட்களை எடுப்பதற்காக எங்கள் வீட்டிற்கு நான் சென்றபோது, என் சித்தப்பா உருட்டு கட்டை வைத்தும், என் சித்தி துடப்பத்தை வைத்தும் தாக்கினார்கள். கடந்த 1989 ம் ஆண்டு என் அப்பா போஸ் என்பவர் செந்துறை அண்ணாநகரில் தற்போது சார்பதிவாளர் அலுவலகத்தின் எதிரே உள்ள 6 செண்ட் காலி மனையிடம் வாங்கி வீடு கட்டியிருந்தார். கடந்த 12.05.1997 ம் தேதி என் அப்பா காலமாகிவிட்டார். அப்போது எனக்கு 1 1/2 வயது இருக்கும். என் அண்ணன் போகர்சாமி என்பவருக்கு 4 வயதிருக்கும். அப்போது என் அம்மா ஜோதிலெட்சுமி சத்துணவு பணியாளராக வேலை செய்து எங்களை பராமரித்து வந்தார்.

4. என் அம்மா உடல் நலக்குறைவு ஏற்பட்டு கடந்த 31.07.2002 ம் தேதி காலமாகிவிட்டார். என் அம்மாவின் இறப்பிற்கு பின்பு எனது தாய்மாமாவான கார்த்திகேயன் என்பவர் பராமரிப்பில் நானும், எனது அண்ணனும் வசித்து வந்தோம்.

பின்னர் நான் விழுப்புரத்தில் வேலை செய்து வந்ததால் அவ்வப்போது நான் அங்கு சென்று வருவேன். இந்நிலையில், கடந்த 20.05.2018ம் தேதி நான் வீட்டிற்கு வந்தபோது எங்கள் வீட்டிற்கு வெள்ளையடித்து மராமத்து வேலைகளை என் சித்தப்பா பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது நான் என் சித்தப்பாவிடம் ஏன் வீட்டில் இந்த வேலைகளை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, வீடு அவருடைய பெயருக்கு மாறிவிட்டதாக கூறி என்னை அன்றைய தினமே அடித்தார்கள். நான் அதை பெரிதாக கருதவில்லை. பின்னர் 21.05.2018ம் தேதியும், 11.09.2018ம் தேதியும் சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்றுகளை நான் மனு செய்து கேட்டபோது, என் அப்பாவின் அம்மாவான ராஜம்மாள் என்பவர் கடந்த 2004ம் வருடம் எங்களது படிப்பிற்காகவும், பராமரிப்பிற்காகவும் கடன் வாங்கியதாக சொல்லி அதில் வீடு இருந்ததை மறைத்து என் அப்பா வாங்கிய சொத்தை காலியிடமாக காட்டி என் அப்பாவின் தம்பியான 1வது எதிரி கணேசன் என்பவருக்கு 39 ஆயிரம் ரூபாய்க்கு கிரையம் கொடுப்பதாக வீடு இருந்ததை மறைத்து கொடுத்துள்ளார்.

5. நாங்கள் சிறுவர்களாக இருந்ததால் எனக்கும், எனது அண்ணனுக்கும் அந்த விபரங்கள் பற்றி தெரியவில்லை. 21.05.2018ம் தேதி பத்திர பதிவு அலுவலகத்தில் வில்லங்க சான்று பெற்றபோது, மேற்படி மோசடி விபரம் தெரிய வந்தது. அதன்பிறகு எனது அப்பா போஸ் என்பவர் பெயரில் 1995ல் இருந்து இருந்த 441 என்ற மின் இணைப்பை 2016ம் ஆண்டு 1411 என்ற மின் இணைப்பு எண்ணாக கணேசன் என்பவர் பெயருக்கு மாற்றியுள்ளார் என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் என் அண்ணன் மனு செய்து கேட்டபோது அந்த மனுவிற்கான பதிலில் 2016ம் ஆண்டு என் அப்பா போஸ் என்பவரே வந்து கையெழுத்து செய்து கொடுத்து மாற்றியதாக மின்பொறியாளர் பதில் அனுப்பியிருந்தார். அதன்பிறகு நான் எனது உடமைகளை எடுப்பதற்காக எங்கள் வீட்டிற்கு சென்றபோது, ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை கொடூரமாக கொல்ல வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடனும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் உருட்டுக்கட்டை மற்றும் துடைப்பத்தால் தாக்கினார்கள்.

6. அதனால் எனது இடது பக்க கன்னம் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இடது பக்க கண்ணுக்கு கீழ் உள்ள எலும்பு வீங்கி பெரிதாகிவிட்டது. அதனால் நான் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்னர் 22.09.2018ம் தேதியிலிருந்து 27.09.2018ம் தேதி வரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பின்னர் நத்தம் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்திருந்தேன். அதன்பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் நத்தம் நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக மனு செய்தேன். நீதிமன்ற உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் மனு தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(சி.ஆர்.எம்.பி.3439/2018ன் மனு நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன்பிறகும் போலீசார் நடவடிக்கை எடுக்காததால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நான் மனு செய்ததன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள்.

7. கடந்த 2018ம் வருடம் நத்தம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததிலிருந்து இன்று வரை போலீசார் என்னை விசாரிக்கவில்லை. உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு சாதகமாக நத்தம் காவல் துறையினர் என்னை விசாரிக்காமலேயே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

8. எனக்கும், 1ம் எதிரிக்கும் உள்ள பிரச்சனை செந்துறையில் உள்ள 1ம் எதிரி கிரையம் பெற்ற வீடுதான் என்றால் சரிதான். என் அப்பா அந்த சொத்தை கிரையம் பெற்று என் பெற்றோர்கள் இறந்த பின்பு எனது அப்பா வழி பாட்டியான ராஜம்மாள் என்பவரிடமிருந்து 1ம் எதிரி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிரி கிரையம் பெற்ற போது நானும், என் அண்ணனும் இளவர்கள் என்றால் சரிதான். 1ம் எதிரி திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.641/2019 என்ற வழக்கு எங்கள் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். நாங்களும் அதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.732/2019 என்ற வழக்கில் பாகப் பிரிவினை கோரியும், 1ம் எதிரி கிரையம்

பெற்ற ஆவணம் செல்லாது என விளம்புகை கேட்டும் வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான்.

9. இரண்டு வழக்குகளும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 21.09.2018 ம் தேதி நான் நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கு புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த நகல் என்னிடம் உள்ளதா என்றால் என் வழக்கறிஞரிடம் உள்ளது. 29.09.2018 ம் தேதி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் மனு நீதிமன்ற மனுவில் இணைக்கவில்லை என்றால் சரியல்ல. 14.09.2019 ம் தேதிதான் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 தான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க நான் நீதிமன்றத்தில் கொடுத்த புகார் என்றால் சரிதான். செந்துறையில் சொந்த வீடு உள்ளது. வேலை காரணமாக விழுப்புரத்தில் இருக்கிறேன். 20.05.2018 ம் தேதி நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு பூர்வீக ஊர் செந்துறை கிராமம், பந்திபொம்மி நாயக்கனூர் ஆகும். என் தகப்பனார் பந்திபொம்மி நாயக்கனூரில்தான் இறந்தார் என்றால் சரியல்ல.

10. என் தகப்பனார் உயிருடன் இருந்த வரையில் பிரச்சனைக்குரியதாக சொல்லப்படும் சொத்தில் வீடு கட்டவில்லை என்றால் சரியல்ல. மனுவில் நான் என்னை எதிரிகள் வீட்டை விட்டு வெளியேற சொன்னதாகவும், அது என் அப்பா சொத்து என்பதால் வெளியேற முடியாது என்று நான் சொன்னதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. 1 ம் எதிரி என் மீது பத்திர நகலை தூக்கி எறிந்து இந்த சொத்து ராஜம்மாள் எனக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று சொன்னதாகவும், நான் ஆவணத்தை பார்த்துவிட்டு இது போலியான ஆவணம், நீங்கள் மோசடியாக உற்பத்தி செய்துள்ளீர்கள் என்று நான் சொன்னதாகவும் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை.

11. அ.சா.ஆ.1 ல் நான் எதிரிகள் நீ என்னை எதிர்த்து பேசுகிறாயா, உனக்கு விளக்கம் எல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை, வெளியே போடா விளக்கெண்ண என்று

கூறி என் கழுத்தை பிடித்து இழுத்து வீட்டுக்குள் தள்ளி அடித்ததாக சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. உருட்டுக் கட்டையை எடுத்து யார் என்னை முதுகில் அடித்தது என்ற விபரத்தை நான் அ.சா.ஆ.1ல் சொல்லவில்லை என்றால் சரிதான். என் சித்தப்பாதான் அடித்தார். இந்த விபரத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. என் சித்தி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியதாகவும், விளக்கமாற்றை எடுத்து உடல் முழுவதும் மாறி மாறி அடித்ததாகவும் கூறியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை.

12. புகார் மனுவில் சொல்லியுள்ள மற்ற விபரங்களையும் நான் எனது போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு நான் செந்துறை பேருந்து நிலையம் சென்று எனது அண்ணன் போகர்சாமிக்கு செல்போன் மூலம் தகவல் கொடுத்து அவர் என்னை அழைத்து வந்து நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக அ.சா.ஆ.1ல் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. செந்துறையில் இருந்து வரும்போது நத்தம் மருத்துவமனை செல்லும் வழியில்தான் நத்தம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனை வந்த போது புகார் கொடுக்க காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இரவு 11.00 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம்.

13. மருத்துவமனையில் சேர்ந்தவுடன் மேல் சிகிச்சைக்கு அனுப்பினார்களா என்றால் மதுரை மருத்துவமனைக்கு உடனே போகச் சொன்னார்கள். பணம் இல்லாததாலும், பேருந்து வசதி இல்லாததாலும் மறுநாள் காலை 3.45 மணியளவில் சென்றேன். வீட்டிற்கு சென்று பணம் எடுத்துவிட்டு காலை 9.00 மணியளவில் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நத்தம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது என் அண்ணன் காவல் நிலையம் சென்று இரவு 11.00 முதல் 12.00 மணியளவில் புகார் கொடுத்தார். நான் அவருடன் செல்லவில்லை என்றால் சரிதான்.

காவல் நிலையத்திலிருந்து வந்து என்னைப் பார்த்தார்கள். அதன்பிறகு நான் காவல் நிலையம் சென்று கையொப்பம் போட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். இந்த விபரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

14. மின் இணைப்பை 1ம் எதிரி தன் பெயரில் மாற்றிக் கொண்டது சம்பந்தமாக நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரம் தவறானது என்றால் சரியல்ல. அவர் கிரையம் பெற்றதன் அடிப்படையில்தான் மின் இணைப்பு பெற்றார் என்றால் சரியல்ல. இறுதி அறிக்கை தவறானது என்றும், அதில் மீண்டும் விசாரணை கோரி சி.ஆர்.எம்.பி.எண்.1602/2023 என மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது சம்பந்தமாக நான் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகார் தவறு என்றாலும்கூட அரசு தரப்பில் உண்மையான சம்பவம் பற்றி சாட்சிகளை விசாரித்து சட்டப்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இறுதி அறிக்கைக்காக போலீசார் என்னையும், என் சகோதரரையும் விசாரித்தார்கள் என்றும், வழக்கிற்காக விசாரிக்கவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்கில் வெற்றி பெற எதிரிகளை மிரட்ட கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2024.12.05 10:15:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்